# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness: **63**

| | | | |
|---|---|---|---|
| Name: | முகைதீன் பிச்சை | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A9, A11, A12, A16 present. Others absent. Petition U/s 317 filed and allowed.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of** 18.07.2023

**முதல் விசாரணை**:

நான் தென்காசியில் மலையான் தெருவில் குடியிருக்கிறேன். நான் கூலக்கடை பஜாரில் கன்னிமாரம்மன் கோவில் தெரு பிரியும் இடத்தில் S.KM என்ற பெயரில் பெயிண்ட் கடை வைத்துள்ளேன். நான் காலை 09.30 மணிக்கு கடையை திறந்து 9.30 மணிக்கு கடையை அடைப்பேன். சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் நான் வழக்கம் போல் கடையை திறக்க வரும்போது இரண்டு பிரிவினருக்கு இடையே தகராறு என சொன்னார்கள். எனவே, கடையை திறக்காமல் சென்றுவிட்டேன். சுமார் 3 நாட்கள் கடையை திறக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள். இரண்டு பிரிவினர் யார் யார் என்று எனக்கு தெரியாது. எதற்காக தகராறு என்றும் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது எனக்கு பழக்கம் இல்லை .

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார்கள் என்னை விசாரித்தார்கள் என்றும் அவர்கள் விசாரித்தபோது 14.08.2007 ம் தேதி வழக்கம்போல் காலை 09.00 மணிக்கு கடையை திறந்து வியாபாரத்தை கவனித்துக்கொண்டிருந்தபோது கூலக்கடை பஜார் விலக்கு பக்கம் இந்து முன்னணியை சேர்ந்தவர்களுக்கும், தமுமுகவினருக்கும் மோதல் ஏற்பட்டு சத்தம் கேட்டது என்றும் நான் வெளியே வந்து பார்த்தபோது அரிவாள் கத்தி வைத்து சிலரை வெட்டிக்காயப்படுத்திவிட்டார்கள் என்றும் இருதரப்பிலும் வெட்டுபட்டு மூன்று மூன்று பேர் இறந்தார்கள் என்றும் சிலருக்கு காயம் என்றும் கேள்விப்பட்டதாகவும் பயந்துபோய் கடையை அடைத்து விட்டு போய்விட்டேன் என்றும் இது சம்பந்தமாக சேரன்மாதேவி காவல் துணை கண்காணிப்பாளர் தன்னை விசாரித்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நெடுநாட்களாக அதே பகுதியில் கடை நடத்தி வருவதால் எதிரிகளை மற்றும் காயம் பட்டவர்களை தெரியும் என்றும் எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**